# ஸ்ரீலங்காவின் காவல் தெய்வங்களான ஸ்கந்த முருகனும் கதிர்காமனும்

( The Guardian Deities of Lanka:
Skanda-Murukan and Kataragama)

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில் : எஸ். பழனியப்பன்.

தமிழ் மொழி பெயர்ப்பு : சாந்திப்பிரியா ( nrj_1945@yahoo.com )

1998 ஆம் ஆண்டு, டிஸம்பர் மாதம் 28-30 தேதிகளில் அகில உலக ஸ்கந்த முருகனின் மகாநாட்டில் பேராசிரியர் திரு பத்மநாபன் ஆற்றிய இந்த உறை 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆசியா பற்றிய அய்வுகள் செய்யும் பத்திரிகையில் வெளியானது.

## வரலாறு

ஸ்ரீ லங்காவில உள்ள ஸ்கந்த முருகனின் ஆலயங்களில் மிகப் பழமையானதும் போற்றத்தக்கதுமானது கதிர்காமத்தில் உள்ள ஆலயமே. ஒரு கூற்றின்படி அது கிருஸ்துவர்கள் தோன்றிய காலத்துக்கு முற்பட்ட ஆலயம். தத்தகாமனி என்ற மன்னன் தமிழ் மன்னன் இலாரா என்பவன் மீது படை எடுத்து அனுராதபுராவின் ஆட்சியைக் கைபற்றிய பொழுது அந்தக் கடவுளே தனக்கு அருள் புரிந்ததாகக் கருதி பழமையான அதை மீண்டும் அழகான ஆலயமாக மாற்றக் கட்டினான். இதற்கு சரித்திர பூர்வமாக எந்த விதமான ஆதாரங்களும் இல்லை. கதிர்காமத்தில் உள்ள ஸ்கந்த ஆலயம் பற்றிய செய்தி 16 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டு இருந்த சியாமி-பாலி என்ற புத்த நூலான ஜினகலாமனி (*Jinakalamali*) என்பதில இருந்தது. 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் புலவரான அருணகிரிநாதர் என்பவர் இயற்றிய பாடல்களில் கதிரகாமனில் உள்ள முருகனைப் பற்றிய பாடல்கள் இடம் பெற்று இருந்ததினால் 15 ஆம் நூற்றாண்டில் ஸ்கந்த முருகனின் ஆலயம் பக்தர்களுக்கு புனிதமான ஒரு யாத்திரை மையமாக இருந்து இருக்க வேண்டும். 16 ஆம் நூற்றாண்டில் ஆயுதம் ஏந்திய வீரர்களால் கருமையபகபக் காவல் காக்கப்பட்டிருந்த அந்த ஆலயம் மிகுந்த செல்வச் செழிப்போடு இருந்து இருக்க வேண்டும் என்பதற்கு ஆதாரமாக அந்த ஆலயத்தை கொள்ளையடிக்க வந்த போர்துகீஸிய படை வீரர்களில் ஒருவனான ரிபிரோ (Ribeiro) என்பவன் எழுதிய இந்தக் குறிப்பு தெரிவிக்கின்றது.



" காடிகாவோவில் (Categao என்ற கதிர்காமம்) 500 ஆயுதம் ஏந்திய படை வீரர்களால் பாதுகாக்கப்பட்டு வந்துள்ள ஆலயத்திற்கு பல ஆண்டுகளாகவே பக்தர்கள் பெரும் அளவில் நன்கொடைகளும் காணிக்கைகளையும் செலுத்தி வந்திருக்க வேண்டும் என்பதின் அடையாளமாக விலை மதிக்க முடியாத அளவில் தங்கம், வைரக் கற்கள் ஆகியவற்றால் செய்யப்பட்டிருந்த நகைகளும் இருந்தன. அந்த சொத்துக்களை நாமே எடுத்துக் கொண்டு விடலாம் என எண்ணி அது பற்றிய தகவல்களை தருமாறு பலரிடமும் பல தடவைகள் கேட்டோம். 1642 ஆம் ஆண்டில் இரண்டாயிரம் லாஸ்கரினிய (Lascarins) படைவீரர்களுடனும், உள்ளூர் மக்களின் மொழி மற்றும் பழக்க வழக்கங்களை நன்கு அறிந்திருந்தவரும், அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவருமான கஸ்பார் பிகூரியாடீ செர்ப்பே என்ற தலைவன் கீழ் **(Gaspar Figueira de Cerpe)**, என்னையும் சேர்த்து 150 போர்த்துகீஸிய படை வீரர்கள் அந்தப் பொருட்களை கொள்ளையடிக்க சென்றோம். அந்த ஆலயம் இருந்த இடத்தின் அருகில் இருந்த ஒருவரிடம் அந்த ஆலயம் பற்றிக் கேட்டோம். அவரும் தனக்கு அந்த ஆலயம் உள்ள இடம் தெரியும் என்று கூறிவிட்டு எங்களுக்கு வழி காட்டிக் கொண்டு சென்றார். பல மணி நேரம் காட்டுப் பகுதிகள் நிறைந்து இருந்த மலையினை சுற்றி சுற்றி வந்தும் அந்த மலை மீதே இருந்த ஆலயத்தைக் காண முடியவில்லை. எங்களுடன் வழி காட்டிக் கொண்டு வந்த ஐந்து பேர்கள், ஒருவரை ஒருவர் அவர்களுக்குத் தெரியாதது போல காட்டிக் கொண்டும் முன்னுக்குப் பின் முரணாகப் பேசிக் கொண்டும், எதை எதையோ சம்மந்தம் இல்லாமல் கூறிக் கொண்டும் வழி நடந்து வந்ததினால் வேண்டும் என்றே எங்களை திசைத் திருப்ப அப்படி நாடகம் ஆடுகின்றனர் என எண்ணி அவர்களில் மூவரைக் கொன்று விட்டோம். மிஞ்சி இருந்த இருவரும் அப்படியே நடக்கத் துவங்க வேறு வழி இன்றி காடிகோவில் இருந்த அந்த ஆலயத்தைக் கண்டு பிடிக்க முடியாமல் நாங்கள் வந்த வழிலேயே திரும்ப வேண்டியதாயிற்று. அதைக் கண்ட பொழுது அந்த ஆலயத்தை உள்ளூரில் இருந்த மன்னனும், பக்தர்களும் மிகவும் பக்தி பூர்வத்துடன் பாதுகாத்து வந்துள்ளனர் எனத் தெரிந்தது ". அங்கு பக்கத்தில் உப்பேணி வைத்திருந்தவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பங்கினை அந்த ஆலயத்திற்கு காணிக்கையாகக் கொடுப்பது வழக்கம் என்பதைக் கவனித்திருந்த இராபரட் நாக்ஸ் **(Robert Knox)** என்பவர் எழுதி உள்ள குறிப்பும் அந்தக் கருத்தை உறுதி செய்யும் அளவில் உள்ளது. அவர் எழுதி உள்ளார்: -

" பக்கத்தில் இருந்த நிலங்கள் மூலமோ, கடல்களில் கப்பல்கள் மூலமோ சென்று நெருங்க முடியாதபடி அமைந்து இருந்தது அந்த மலைப் பாங்கானப் பிரதேசம். கடவுள் அருளால் ஏற்பட்டிருந்த கட்டிக்கிராம் என்ற அந்த மலைப் பாங்கான பிரதேசத்தில் உப்பளத்தை வைத்திருந்த எழைப் பணக்காரர் அனைவருமே தங்களுடைய வருமானத்தில் அந்த ஆலயத்திற்கு காணிக்கை கொடுக்க வேண்டும் என்ற நியதி இருந்தது ". கதிர்காமத்தில் இருந்த அந்த ஆலயத்தைப் பற்றிய செய்தி 19 ஆம் நூற்றாண்டில் சிலோன் என்ற பகுதியைப் பற்றி தாவி **(Davy's)** என்பவர் எழுதி உள்ள நூலில் " அந்த ஆலயம் ஒரு பாழடைந்த இடத்தில், காட்டுப் பகுதிக்கு உள்ளே அனைவராலும் எளிதில் செல்ல முடியாத இடத்தில் இருந்ததாகவும், அந்த இடத்தின் அருகில் இருந்தவர்களும் ஏழ்மை நிலையில் இருந்தவர்களாகவே இருந்தனர் " எனவும் எழுதி உள்ளார். ஸ்ரீலங்காவில் இருந்து மட்டும் அல்ல தொலை தூர இந்தியப் பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வந்து வணங்கிய புனித யாத்திரைப் பகுதியாக கதிர்காமன் இருந்ததாம். அந்த ஆலயத்தைத் தவிற வேறு சில கட்டிடங்களும் ஆலயத்தின் அருகில் இருந்தது. அவற்றைத் தவிற அங்கு கதிர்காம திவாலி (கூடம் ) , கணேஷ் திவாலி மற்றும் புத்த விஹார் போன்றவைகள் கவனிப்பார்



அலாட்டி அம்மாக்கள் செய்யும் பூஜை

அற்று பாழடைந்த நிலையில் இருந்தன. மேலும் ஒரு போதி மரம், ஐந்து வித தேவதைகளுக்கான சிறிய ஆலயங்கள், பைரவருக்காக ஒரு சிறிய சிவன் கோவில், யாத்ரீகர்கள் வந்து தங்க இடம், மற்றும் ஒரு அலுவலகமும் இருந்தன. கதிர்காம திவாலே இரண்டு கட்டிடங்களைக் கொண்டு அமைக்கப்பட்டு இருந்தாலும் வெளியில் இருந்த கட்டிடதின் உள்ளே மட்டும் செல்ல முடிந்த நிலையில் இருந்தது. அதன் சுவர்களில் பல வண்ண நிறத்தில் கடவுள் சிற்பங்கள் வரையப் பட்டு, மேல் கூறை இனம் தெரியாத வண்ணங்களை உள்ளடக்கிய துணியில் இருந்தது.

அந்த ஆலயத்தில் உள்ள கல்யாண மடம் என்ற பெரிய அளவிலான இருக்கை இடமும் அனைவரின் கவனத்தையும் கவரும் வண்ணத்தில் உள்ளது. உயர்ந்த பீடத்தின் இரு புறமும் எழுப்பப்பட்டு உள்ள தடுப்புக்கள் கால் இல்லாத ஒரு நாற்காலி போல, புலித் தோல்கள் கொண்டு மூடப்பட்டு, ஆலய உற்சவங்களில உபயோகிக்கப்படும் கொண்டு மூடப்பட்டு, ஆலய உற்சவங்களில் உபயோகிக்கப்படும் வாத்தியங்களையும் வைத்துள்ளபடி அமைக்கப்பட்டு உள்ளது. அதன் பக்கத்தில் எப்பொழுதும் எரிந்து கொண்டிந்த பெரிய ஹோம குண்டமும் உள்ளது. அங்கு வசிக்கும் பிராமணர்கள் அந்த கல்யாண மடம், கல்யாண நாதா என்பவருக்கு சொந்தமாக இருந்தது என்று கூறுகிறனர்.

அந்த ஆலயத்தை சுற்றி ஆலயத்திற்கு சொந்தமான பல கிராமங்கள் உண்டு. அந்த இடங்களில் வசிப்பவர்கள் அந்த நிலங்களில் வேலை செய்பவர்கள். ஆலயத்தில் உள்ள பண்டிதர்கள், அரசாங்க அதிகாரிகளைத் தவிற பன்னிரண்டு கபூரலாக்கள் என அழைக்கப்படுபவர்கள் பஸ்நாயகா நிலாமே என்ற அதிகாரியின் மேற் பார்வையில் இயங்குகின்றனர். 1815 ஆம் ஆண்டு முதல் பிரிடிஷ் அரசு அந்த நாட்டை தன் கட்டுக் கோப்புக்குள் எடுத்துக் கொண்ட பின் பெரும் அளவில் ஆலய யாத்திரையை மேற் கொண்ட பக்தர்கள் அங்கு செல்வது குறைந்து போயிற்று.

## வருட யாத்திரை

19 ஆம் நூற்றாணடு ஜுலை மாதம் பௌர்ணமி முதல் பதினைந்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் வருட உற்சவங்களைத் தவிற ஆலயம் நடமாற்றம் அற்ற இடமாகவே காட்சி தருகின்றது. இரவில் யானை ஒன்றின் முதுகில் ஸ்வாமியை ஒரு பல்லக்கில் வைத்தபடி பதினாலு நாட்களும் பஸ்நாயகா நிலாமே தலைமையில் தீப் பந்தம் ஏற்றியபடி ஊர்வலம் நடை பெறுகின்றது. விழாவின் கடைசி நாளில் பிராஹிரா என்றறும், தண்ணீர் அறுக்கும் ( water cutting ) வைபவமும் நடக்கின்றது. சமீபத்து நிலவரப்படி

கதிர்காமனின் திருவிழாவிற்கு மட்டுமே யாத்ரீகர்கள் செல்கின்றனர் எனத் தெரிகின்றது. மலேரியா மற்றும் பிற பரவும் வியாதிகளும் நிறைந்து உள்ள இடம் கதிர்காமம் என்பதினால் அங்கு நடக்கும் வருட விழாக்களின் மூலமும் வியாதிகள் பரவலாயிற்று. அது மட்டும் அல்ல மக்களின் குடி நீர் தேவைக்கு நம்பி இருக்கும் மேனிக் கங்காவும் ( **Menik ganga**) வெய்யில் காலங்களில் வரண்டு விடுவதால் அங்கு வரும் மக்கள் மிகுந்த கஷ்டப்பட்டனர். 19 ஆம் நூற்றாண்டின் கடைசி கட்டத்தில் அங்கு யாத்திரைக்கு வரும் பக்தர்களின் துயரைக் களைய அரசாங்கம் அந்த இடத்தில் தங்கும் இடம், பாதுகாப்புப் பணிக்குக் காவலர்கள், சட்ட ஒழுங்கைப் கண்காணிக்க ஒரு நீதிபதி, மருத்துவ வசதி என பல வசதிகளை செய்தனர். அந்த வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பின் அங்கு வரும் யாத்ரீகர்களின் எண்ணிக்கைப் பெருகலாயிற்று. 1871 ல. அங்கு வந்த பக்தர்களின் எண்ணிக்கை 2000 ல் இருந்து 1872வில் 5000 ஆகவும், 1873 ல் 7000-8000 வரையிலும் அதிகரித்தது. ஆக சுகாதார மேம்பாடு, தொடர்ப்பு சாதன வசதிகள் மற்றும் தோட்டங்களில் பணி புரிய வந்த பெரும் எண்ணிக்கையிலான தமிழ் பேசும் மக்கள் என்ற மூன்று காரணங்கள் அங்கு வந்த யாத்ரீகர்களின் எண்ணிக்கைப் பெருகியது.

## நற்பண்புகள் சங்கமித்த இடம்

2000 வருடங்களுக்கும் மேலாக ஒருங்கிணைந்து ஆனால் தனித் தன்மைகளுடன் வளர்ந்து வந்த இரு மதப் பிரிவினரையும் ஒருங்கிணைக்கும் இடமாக கதிர்காமன் அமைந்தது. அங்கு நடக்கும் அனைத்து தெய்வ நம்பிக்கையின் அடிப்படையிலான நிகழ்ச்சிகளும மிகவும் மதிக்கப் பட்டதினால் இந்துக்கள் மற்றும் புத்த மதத்தினர் இருவருமே அங்கு வரலாயினர். புராணக் கதைகளில் இடம் பெற்றுள்ள வேத்தாஸ் (Veddahs) ஏன்பவர்களுடன் கதிர்காமனுக்கு தொடர்ப்பு இருந்தது. வேத்தாஸ் என்ற பிரிவினர் அந்த தீபகற்பத்தில் வாழ்ந்து கொண்டு அவர்கள் இனத்தின் ஒரு வழக்கப்படி கதிர்காமனையும் வணங்கி வந்தவர்கள். ஸ்கந்த முருகனின் ஆராதனைக்கு உகந்த இடமாக இந்தக்கள் கதிர்காமனில் இருந்த ஆலயத்தைப் பற்றிக் குறிப்பிடுவது உண்டு. அந்த தீவில், முக்கியமாக வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் வேத முறைகளைப் பின் பற்றி நடத்தப்படும் வழிபாட்டு முறைகளுக்கு மாறுபட்ட வழிபட்டு முறையைக் கொண்டு அமைந்திருந்தாலும் அந்த ஸ்கந்த முருகனின் ஆலயங்களும் கதிர்காமனுடன் தொடர்ப்புக் கொண்டே இருந்தது. முருகனின் இளைய மனைவியான வள்ளி அந்த தீபகற்பத்தில் வாழ்ந்து வந்த வேத்தாஸ் என்ற பிரிவினரில் இருந்து வந்தவர் எனவும் தீய சக்திகளுடன் இணைந்து இருந்த சூரபத்மனின் வதத்திற்குப் பிறகு வேத்தாஸ் இனத்தினரின் வழிபாட்டுத் தலமாக கதிரகாமக் ஸ்கந்த முருகனின் ஆலயம் அமைந்தது. முருகன் மீதான பக்தி கொண்டு அலைந்து கொண்டிருந்த மலை வாழ் மக்களின் தொடர்பினால் கூட அந்த



கதிர்காமனில் வானியா- லேட்டோ பிரிவினர்
( Wanniya-laeto )

மாதிரியான கதைகள் தோன்றி இருந்ததின் காரணமாக இருக்கலாம். ஸ்ரீலங்காவின் புத்தமத வழிபாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பதினாறு புனித இடங்களில் ஒன்றாக கதிர்காமின் ஆலையமும் உள்ளது. தங்களைப் பாதுகாக்கும் கடவுளாக கருதப்படும் நாதா, பட்டினி மற்றும் விஷ்ணு போன்ற கடவட்களுடன் கந்த குமரன் அல்லது கதிர்காமனும் சேர்க்கப்பட்டு ஸ்ரீலங்காவின் வணக்கத்துக்கு உரிய கடவுளாக ஏற்கப்பட்டு உள்ளார். அதனால்தான் கண்டியில் நடத்தப்படும் புனிதப் பல்லை பவனியாக எடுத்துச் செல்லப்படும் புத்தரின் புனிதத் திருவிழா ஊர்வலத்தில் இந்த நான்கு கடவுளும இடம் பெற்றுள்ளனர். 14 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் இவர் சிங்கள இனத்தவரிலும் பெரும் புகழ் பெற்றார். அதற்குக் காரணம் 13 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் தெற்குப் பகுதியில் மீண்டும் தலைத் தூக்கிய முருக வழிபாடே ஆகும். சிங்கள புத்த மத வழிபாட்டில் ஸ்கந்தன் வழி பாடும் இணைக்கப் பட்டு இருந்ததின் காரணம் பல நூற்றாண்டுகளாக புத்த-இந்த மதங்கள் ஒன்றிணைந்து வளர்ந்ததே. கதிர்காமனின் புராண, இதிகாச வரலாற்றுச் செய்திகளையும் கதைகளையும் காணும் பொழுது சமூக நடை முறைகளில் மாறுபட்ட கருத்துக்கள் கொண்டு வளர்ந்து வந்த இந்து, சிங்கள, புத்த மற்றும் வேத்தாஸ் இனங்களின் வழிபாட்டு முறைகள் ஒன்றிணைந்து சங்கமித்துள்ளது போலத் தோன்றும். அந்த மூன்று ஆலைய வழிபாட்டு முறைகளைக் கவனிக்கும் பொழுது இந்த எண்ணம் இன்னமும் வலு பெறுகின்றது.



கதிர்காமனின் இரவு ஊர்வலத்தில் கதிர்காமனை எடுத்துச் செல்லும் கபூரலா குருமார்க்கள்

கதிர்காமனின் மூன்று ஆலையங்களில் அகம முறை இல்லாத வழிபாடும் மற்ற கட்டுப்பாடுகளும் இல்லாமல் தனித் தன்மை கொண்டு உள்ளது மூல ஆலையம். ஆங்கு கற்பக் கிரகத்தில் எந்தவிதமான சிலையும் இன்றி ஒரு திரை சீலையினால் முடப்பட்டே உள்ளது. வருடாந்திர விழாவில் யானையின் முதுகில் ஏற்றப்பட்ட ஒரு அலங்கரிக்கப்பட்ட பேழையை ஊர்வலத்தில் எடுத்துச் செல்கின்றனர். பரம்பரைப் பரம்பரையாக நடைபெற்று வரும் வழக்கத்தின்படி கபூரலா பிரிவினர்தான் அதன் பூஜைகளை செய்கின்றனர். அவர்களை அந்த வழக்கத்தைக் கைவிடக் கூறும் அளவுக்கு வேறு எவருக்கும் அதிகாரம் கிடையாது. யானையின் முதுகில் ஏற்றப்படட அலங்கரிக்கப்பட்ட பேழையை உர்வலத்தில் எடுத்துச் செல்வதும், அந்த சடங்குகளை செய்ய கபூரலா என்ற பிரிவினரை நியமனத்திலும் காணப்படும் சடங்குகள் சிங்கள புத்த மத வழிபாட்டு தேவாலியைத் தழுவி உள்ளது சூபாலவே தோன்றுவதால் இவற்றின் இடையே ஒரு ஒற்றுமை எந்த விதத்திலோ விதத்திலோ உள்ளது எனத் தெரிகின்றது. அது மட்டும் அல்ல அந்த அலயத்தின் அருகில் அமைக்கப்பட்டு உள்ள புத்த ஆலயமும். போதி மரமும் கதிர்காமத்திற்கும் புத்த மதத்திற்கும் நூற்றாண்டின் இடைக் காலத்தில் இருந்து இந்நாள் வரை இருந்து வரும் தொடர்புக்களை மேலும் உறுதி செய்கின்றன.

# இந்துக்களின் பண்டைய பழக்கங்கள்

ஸ்ரீலங்காவில் உள்ள இந்துக்களால் பெரிதும் வணங்கப்படும் கந்தனுக்கு அந்தத் தீவில் நூற்றுக் கணக்கான ஆலயங்கள் உள்ளன. பல நூற்றாண்டுகளாக இந்துக்கள் பெரும் எண்ணிக்கையில் வசிக்கும் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இந்த ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றில் பல ஆலயங்கள் மிகப் பழமையானவை என்றாலும் சில புது ஆலயங்களும் எழுப்பப்பட்டு உள்ளன. அந்த ஆலயங்களின் தோற்றமும் வரலாற்று செய்திகளும் கதிர்காமனுடன் அவற்றுக்கு இருந்த தொடர்பை காட்டுகின்றன. வடக்குப் பிராந்தியத்தில் மிகவும் முக்கியமானவையும், பண்டைய காலத்தை ஒட்டிய ஆலயமும் நல்லூர், (Nallur), மடவாட்டபுரம் (Mavattapuram), மற்றும் ஜாப்னா (Jaffna) பகுதியில் செல்வகனிதியிலும் (Celvaccanniti) உள்ளன. செல்வகனிதியில் உள்ள ஆலயத்தில் அகம முறையிலான வழிபாட்டு முறை இல்லை. நல்லூரில் உள்ள கந்தஸ்வாமி ஆலயத்தில் மூல கர்பக்கிரகத்தில் எந்தவிதமான விக்கிரமும் இன்றி முருகனை குறிக்கும் வகையில் வேல் மட்டுமே உள்ளது

கிழக்குப் பகுதியில் உள்ள வெருக்கால் (Verukal,) , சித்தான்தி (Cittanti) , மற்றும் திருக் கோவில் (Tirukkovil) போன்ற இடங்களில் உள்ள ஆலயங்கள் மிகப் பழைமயானவை. அங்கு வேத்தாஸ் இனத்தவர் பெருமளவில் வந்து சைவ வழியை சார்ந்த தமிழர்களுடன் கலந்து கொண்டு வருடாந்திர விழாக்கள் சிறப்பாக நடக்க உதவினர். மட்டக்கிளப்புத் தேக்கத்தில் உள்ள முருகன் ஆலயங்களில் நடைமுறை பழக்கத்தில் இருந்த திருப்பட்டைக்கோவில; *(Tiruppataikkoyil)* பொது வழக்க முறைகளைக் கண்டால் அது அந்த ஆலயங்களுக்கும் கதிர்காமனுக்கும் வைத்து இருந்த நெருங்கிய தொடர்பு தெரியவரும். அந்த தீபகற்பத்தின் கதிர்காமனுக்கு தீர்த யாத்திரை மேற் கொண்ட வியாபாரிகளான செட்டியார்களினால் கிழக்குப் பகுதியில் இருந்த ஆலயங்களில் நடத்தப்படும் வழிபாட்டு முறைகளைக் கண்டால் கதிர்காமனின் தோற்றமும் வளர்ச்சியும் புரியும். பல்வேறு ஆண்டுகளாக கதிர்காமனுக்கு தீர்த்த யாத்திரை மேற் கொண்டதின் விளைவாக ஒருமித்த முருக வழிபாட்டு வழிபாட்டு முறைகள் வளரத் துவங்கின. தேக்காட்டுக் கோவில்கள் என்று பெயரிடப்பட்ட முக்கியமான வழிபாட்டுத் தலங்களின் பட்டியலில உள்ள தேசிய ஆலயங்களில் ஒன்றாக கதிர்காமனும் உள்ளது.



முருக வழிபாட்டு முறைகளை ஆராய்ந்தோம் எனில் ஸகந்த-முருகன் ஆலயங்களில் புகழ் மிக்கதும் புனிதமுமான ஆலயம் என்ற பெருமையை கதிர்காமன் பெறுகின்றது. மற்ற ஆலயங்கள் உள்ளூர்களில் மட்டுமே புகழ் பெற்றிருக்க கதிர்காமனோ தேசிய அளவில் முக்கியம் வாய்ந்த ஆலயம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. கதிரேசன், கதிர்காமன், கதிர்மலை என்ற பெயர்களை சுட்டிக் கொள்வதின் மூலம் ஸ்ரீலங்காவில் வாழ்ந்து வரும் சைவத் தமிழர்கள் கதிர்காமனுடன் தங்களுக்கு உள்ள உறவின் ஆழத்தை வெளிப் படுத்துகின்றனர். கதிர்காமனைப் பற்றிய பல பக்தித் தோத்திர நூல்களும் தலப் புராணப் புத்தகங்களும் தமிழில் உள்ளன. அவற்றில் பல புத்தகங்கள் முறையாக எழுதப்படவில்லை என்பதினால் கதிர்காமனைப் பற்றிய வரலாற்றுச்

செய்திகளை முழுமையாகவும் சரியாகவும் புரிந்து கொள்ள முடியவில்லை. அவற்றில் மிகப் பழமையானதும், 15 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகவும் கூறப்படும் அருணகிரிநாதரின் பாடல்கள் மூலமே சைவ தமிழர்கள் கதிர்காமனை நன்கு அறிந்து கொண்டிருந்தனர் என்பதையும் அது முருக வழிபாட்டுத் தலமாக இருந்தது என்ற உண்மை நிலையையும் தெரிய வருகின்றது.

அருணகிரிநாதரின் திருப்புகழில் கதிர்காமனைப் போற்றும் பதினாறு பாடல்கள் ( செய்யுட்கள்) உள்ளன. கதிர்காம முதுர் (***Katirkama mutur*** ) எனப்பட்ட கதிர்காமம் மிகப் பழமையானது. முருக வழிபாட்டுத் தலத்தின் யாத்திரையை மேற் கொண்ட பக்தர்கள் மற்ற இடங்களில் இருந்த ஆலயங்களுக்கச் முதலில் சென்ற பின்னரே மிக முக்கியமான ஆலயம் என கருதப்பட்ட அந்த ஆலயத்திற்கு சென்றனர்.

அருணகிரிநாதரின் திருப்புகழ் என்ற நூலில் முருகன் கதிர்காமனில் மலை உச்சியில் வசிப்பதாக எழுதப்பட்டு இருந்ததில் இருந்து கதிரமலை என்ற அது புகழ் மிக்கத் தலமாக அவருடை காலத்தில் இருந்து இருக்கின்றது என்பது புரியும். திருப்புகழ் இயற்றப்பட்ட காலத்தின் பொழுது முருகன் வேடர் குலப் பெண்ணுடன் அந்த மலையில் இருந்ததாக நம்பப்பட்டது. (**verpil a riya veticci kalavikur cittira manikka vativane--- வெற்பில் அரிய வெட்டிச்சி கலவிக்குர் சித்திர மாணிக்க வடிவானே)** திருப்புகழில் முருகனை சிவனின் பிள்ளை என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. ( **அரஹர சிவாய சம்போ கிருபாகரகுமரா- arakara civaya campu kuruparakumara** ) கடவுள் குமரன் அதில் குமாரப் பெருமான், தேவர்பெருமான் வீரப் பெருமான் , குரனாட்டப் பெருமாள் எனவும் கதிர்காமப் பெருமாள் என்றும் கூறப்படுகின்றார். பக்திக்கு மூலமும் முடிவுமாக விளங்குபவர் அவர் என அருணகிரிநாதர் கூறி உள்ளார். ஏழை எளியவர்க்கு ( **elaikku irankum perumal**) இரக்கம் காட்டுபவரும் நீதியை நிலை நாட்டுபவரும் அவரே என்கின்றார்.

அவர் ஒரு வழிகாட்டி, குரு , நம் துயரை களைபவர், நோய்களைத் தீர்த்து தீமைகளை அழிப்பவர், பக்தனுக்கு அளவில்லா மன இன்பம் தருபவர், நல் வாழ்விற்கு தேவையானவற்றைத் தருபவர், சிவனின் அவதாரம், உலக நாயகன், பிரபஞ்சத்தை காப்பவர், தேவையானவற்றைக் கொடுத்து இறுதியில் அழிவற்ற பேரானந்தத்தைத் தருபவர் , ஜாதி பேதமின்றி அனைவருக்கும் பொதுவானவர் என்றெல்லாம் கதிர்காமனைப் பற்றி அருணகிரிநாதர் காலத்தில் வாழ்ந்த இந்து மத பக்தர்கள் போற்றி வணங்கினர். முருக பக்தி இயக்கம் அகம விதிகளை பின்பற்றி கடை பிடிக்கப்பட்ட வழிபாட்டு முறைகளை ஒதுக்கி விட்ட ஒரு மாற்று வழிபாட்டு முறை இயக்கமாக இன, மொழி பேதங்களைக் கடந்து உருவாகி வந்தது. அனைவரும் ஓன்றே என்பதைப் பறை சாற்றும் விதத்தில் இயற்கையான சூழ் நிலையில் அமைந்து இருந்த கதிர்காமனில் அனைத்துப் பிரிவினைச் சார்ந்த பக்தர்களும் வந்து ஓன்றிணைந்து பூஜித்தனர். அதனால்தான் கதிர்காமனைப் பற்றி எழுதிய அருணகிரிநாதர் அவரை ஏழை எளியவர்களிடம் அன்பு கொண்டு இரட்சிப்பவர் , நீதியின் காவலர் எனவும் போற்றிக் கூறினார். ஜாப்பினா பட்டினம ( **Jaffnapatnam**,) என்ற வன்னியில் 16 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கதிர்மைப்பட்டு என்ற நூல் கதிர்காம கடவுளைக் குறித்து எழுதப்பட்டதொன்று. கொத்தடிமைகளாக நிலங்களில் வேலை செய்து வந்த பள்ளர்களின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் வகையில் அமைந்துள்ள பாடல் அது. ஒரு கணவருடன் ஒண்றிணைந்து வாழும் இரு மனைவிகளின் சம்பாஷணைப் போல அமைந்து உள்ளது அந்தப் பாடல். அதில் ஒருவள் இலங்கையை சேர்ந்தவள், மற்றவள் இந்திய நாட்டவள். இருவரும் தங்களுடைய தாய் நாட்டின் பெருமையைக் கூறும் விதத்தில் அமைந்து இருந்தது அது. ஸ்ரீலங்காவைப் பற்றி எழுதப்பட்டுள்ள உள்ள பாடலில் எல்லா இடங்களை விட

சிறப்பானதும் புனிதமுமான இடம் கதிர்காமம் எனவும் அதைத் தொடர்ந்து அமைந்துள்ளவை திருகேட்டீஸ்வரம் (**Tirukketisvaram**) மற்றும் திருக்கோணம (**Tirukonam**;) எனவும் கூறப்பட்டு உள்ளது. கதிர்காமத்தைப் பற்றிக் கூறுகையில் அதை கதிராபுரி என்றும் கதிரை (***Katirai* and *Katirapuri***) என்றும் கூறுகின்றது. கதிரை என்றால் தென் பகுதியில் வாழும் வேலன் என்ற பொருளில் தென்கதிர் வேலன் என எழுதப்பட்டு உள்ளது. கதிர்மலைப்பட்டு என்ற நூலில் ஸ்கந்த முருகனைப் போன்றே அனைத்து சக்திகளைக் கொண்டவர் கதிர்காமன் என்றும் அவரை சங்கரியின் மகன் எனவும், வள்ளியின் நாயகன் எனவும் மரங்கள் மீதும் பூங்காக்களிலும் வசிக்கும் தோகை விரித்தாடும் மயில் மீது அமர்ந்து உள்ளவர் எனவும் எழுதப்பட்டு உள்ளது. சிவபெருமானின் மூன்றாம் கண்களில் இருந்து பறந்து சென்ற நெருப்புக் கணங்கள் சரவணப் பொய்கை எனும் நதியில் விழ, அது ஆறு குழந்தைளை பெற்றெடுக்க, அவை அனைத்தும் இணைந்து ஆறு முகங்களையும், பன்னிரண்டு கைகளையும் கொண்ட ஸ்கந்தனாக அவதாரம் பெற்றது. அவர் இந்த பூமியின் பதினான்கு பகுதிகளின் பாதுகாவலர் ஆனார். தக்கனை அடக்கிய பலமிக்க விரபாகுவை விட பலசாலியும் 1008 சூரிய கணங்களை சிறை பிடித்து வைத்திருந்தவனும் ஆன சூரனை வென்று அந்த கணங்களை விடுதலை செய்தார். இப்படியாக கந்த புராணத்தில் உள்ளவற்றையே வெளிக் காட்டும் விதத்தில் அமைந்து இருந்தது அந்த நூல். கதிரை கடவுள் தன்னை நாடி வருபவர்களின் அனைத்து வேண்டுகோளையும் நிறைவேற்றியவர். இவற்றில் இருந்து தெரிய வருவது என்ன எனில் 16 ஆம் நூற்றாண்டில் கதிர்காமன் ஸ்கந்த முருகனின் அவதாதமாகவே கருதப்பட்டு அந்த ஆலயம் அந்த தீப கர்பத்தின் முக்கிய வழி பாட்டுத் தலமாகவும் விளங்கியது.

மத்திய நூற்றாண்டில் இருந்த ஸ்ரீலங்காவின் நூல்கள், தென் இந்தியாவில் ஸ்கந்த முருகனின் புராணக் கதைகளை உள்ளடக்கி கந்த புராணத்தில் எழுதப்பட்டிருந்தவற்றை விட சிறிது மாறுபட்டே உள்ளன. ஸ்கந்த முருகனின் புராணக் கதைகளை உள்ளடக்கி இந்தத் தீபகர்பத்தில் எழுதப்பட்டுள்ள சமஸ்கிருத நூலான தஷ்ஷிண கைலாச மான்மியத்தில் (***Daksina-kailasa manmiyam***,) எழுதி உள்ளது என்ன எனில் " குருன்சா மலையை இரண்டாகப் பிளந்து அசுரன் தாருகனை தன் வேலால் குத்தி அழித்த பின் தேவகிரிக்கு சென்ற முருகன் அங்கிருந்துக் கிளம்பி திருச்சைநல்லூர் (**Tirucceynalur**) மற்றும் பிற புனித இடங்களுக்கும் சென்றார். அதற்குப் பிறகு குரு பகவான் மூலம் சூரனும் அவன் சகோதரர்களும் செய்து வந்த அக்கிரமங்களைப் பற்றிக் கேட்டறிந்தவர் வீரவாகு தேவர் தலைமையில் பெரும் படையுடனும், எண்ணற்ற பூத கணங்களுடனும் கதிர்காமத்தினை அடைந்தார். எமகூடம் என்ற இடத்தில் அமைக்கப்பட்டு இருந்த ஆலயத்தில் முருகன் இளைப்பார் அவருடன் சென்றவர்கள் அக்கம் பக்கத்தில் இருந்த இடங்களில தங்கினார்கள். அங்கிருந்து மகேந்திரபுரி என்ற இடத்தில் இருந்த சூரபத்மனிடம் துாதராக வீரபாகுட்டித்தேவர் சென்றார். அதன் பின் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே நடந்த போரில் கதிர்காமனில் தங்கி இருந்த முருகனும் அவர் படை வீரர்களும் அதையே தங்களுடைய படை வீடாக (military camp) மாற்றிக் கொண்டு யுத்தம் செய்தனர். சூரனை வெற்றி கொண்டதும் மீண்டும் அங்கு திரும்பிய முருகன் அதையே தன்னுடைய தங்கும் இடமாக மாற்றிக் கொண்டார்.

தென் இந்தியப் பகுதிகளில் இருந்த பண்டைய வழிபாட்டு வழக்கங்கள் மாறி விட்டன. கதிர்காமனின் வழிபாட்டு முறைகளின் புனிதத்தை பாதுகாக்கும் வகையில் வழிபாட்டு முறை மாறத் துவங்கி உள்ளன. ஸ்கந்த-முருகனின் புனித ஆலயங்களின் பட்டியலில் கதிர்காமனையும் இணைத்துக்

கொள்ளும் வகையில் படைவீடு என்ற வழிபாட்டுத்தல பட்டியல் மாற்றி அமைக்கப்பட்டு உள்ளது. முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்ன எனில், தென் இந்தியாவின் புராணக் கதைகளில் இருந்து மாறுபட்டு ஸ்ரீலங்காவில் முருகன்-வள்ளித் திருமணம் நிகழ்ந்ததாக குறிப்பிடப்படும் இடம் ஆகும். கந்த புராணக் கதையின்படி முருகன்-வள்ளீ திருமணம் நடந்த இடம் தொண்டை மண்டலம் என்ற பகுதியில் இருந்த வள்ளி மலை ஆகும். பண்டைய தமிழ் வழிபாட்டு முறைகளில் இருந்து மெல்ல மாறுபட்டு விளங்கத் துவங்கிய வழிபாட்டு முறைகளுக்குக் காரணம் பல காலத்திற்குப் பிறகு உலக நாடுகளில் பல இனத்தவராலும் ஏற்கப்பட்டு பரவிய முருக பக்தியின் விளைவுகளே. ஸ்ரீலங்காவில் வேத்தாஸ், சிங்களவர், இந்துக்கள் இடையே ஏற்பட்ட இணக்கத்தைக் காணும் பொழுது தக்ஷிண மகாத்மியம் என்ற நூலில் உண்மையில் நிலவிய பழக்க வழக்கங்கள் முறையாக குறிப்பிடப்பட்டு உள்ளது என நினைக்கத் தோன்றுகின்றது.